# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 27 வியாழக்கிழமை 11.09.2025 கதிர் 306

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel





## ஓடோடிச் சென்று மஹிந்தவை சந்தித்துப் பேசிய சீனத் தூதுவர்

கொழும்பு, செப். 11

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு, விஜேராம அரச இல்லத்தில் இருந்து இன்று பிற்பகல் வெளியேறி அம்பாந்தோட்டை - தங்காலைக்குக் குடியேறச் சென்றுள்ளார். இந்நிலையில், மஹிந்த விஜேராம அரச இல்லத்தில் இருந்து வெளியேற முன்னர் இலங்கைக்கான சீனத் தூதுவர் அங்கு சென்று அவரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "விஜேராமவிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து நான் புறப்படுவதற்கு முன்னர், இலங்கைக்கான சீனத் தூதுவரைச் சந்தித்து கலந்துரையாடியதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது வருகைக்கு நான் நன்றி தெரிவிப்பதுடன்,

7➤

# விஜேராம இல்லத்தில் இருந்து இன்று வெளியேறிய மஹிந்த



கொழும்பு, செப். 11

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் உள்ள விஜேராம வீதியில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து இன்று பிற்பகல் வெளியேறினார்.

கொழும்பு, விஜேராம வீதியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அரசியல்வாதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பல்லேறு தரப்பினர் இன்று காலை முதல் வருகை தந்திருந்தனர்.

இன்று பிற்பகல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறவுள்ளார் என்று வெளியான தகவலையடுத்து அனைவரும் அங்கு சென்றனர்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட சில வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு வருகை தந்தனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் 150 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு நேற்று சான்றுரைப்படுத்தினார்.

7➤

## உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து மைத்திரியும் இன்று வெளியேறினார்



கொழும்பு, செப். 11

கொழும்பு, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து முன்னாள்

7➤

## யாழில் வாள்வெட்டு! குடும்பஸ்தர் காயம்!!


கொழும்பு, செப். 11

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பணம், குரும்சிட்டி - தெல்லிப்பழை வைத்தியசாலை வீதியில் இன்று வியாழக்கிழமை காலை வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட

7➤





## குருக்கள்மடம் மனிதப் புதைகுழி: இன்று நேரில் பார்வையிட்ட நீதிபதி

மட்டக்களப்பு, செப். 11

மட்டக்களப்பு - குருக்கள்மடத்தில் மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாகக் கருதப்படும் இடத்தைக் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இன்று வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர்.

7➤

## இராணுவ வாகனம் மோதி இளைஞர் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் வாகனம் மோதி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு இராணுவத்தினரின்

7➤



# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க முடிவு!

கொழும்பு, செப் .11

ஜனாதிபதியின் வரப்பிரசாதங்களை (ரத்து செய்தல்) சட்டமூலம் நேற்று நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் தற்போது உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்திவரும் நிலையில் நேற்று (10) நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்திற்கு அமைய அவர்கள் அந்தச் சலுகையை இழந்துள்ளனர்.

அதன்படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று (11) தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறி, ஹம்பாந்தோட்டையில் உள்ள கார்ல்டன் இல்லத்திற்குச் செல்ல உள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரும் தங்கள் உத்தியோகபூர்வ இல்லங்களை அரசாங்கத்திடம் ஒப்படைப்பார்கள் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏதேனும் காரணத்தினால் சம்பந்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒப்படைக்கப்படாவிட்டால், அவை தொடர்பில் எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை (ரத்து செய்தல்) சட்டமூலத்திற்கு அமைய, எதிர்காலத்தில் செயல்பட எதிர்பார்ப்பதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் வரப்பிரசாதங்களை (ரத்து செய்தல்) சட்டமூலத்தின் 2ஆவது வாசிப்பு விவாதம் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நேற்று (10) இடம்பெற்றது.

இந்த வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக 1 வாக்கும் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க மாத்திரமே ஜனாதிபதியின் வரப்பிரசாதங்களை (ரத்து செய்தல்) சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்திருந்தார்.

இதன்படி ஜனாதிபதியின் வரப்பிரசாதங்களை (ரத்து செய்தல்) சட்டமூலம் 150 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நிறைவேறியமை குறிப்பிடத்தக்கது.

# வழக்கு தொடர்பான கொடுப்பனவுகளை வங்கி அட்டைகள் மூலம் ஏற்றுக் கொள்ளும் வசதி அறிமுகம்!

கொழும்பு, செப் .11

இலங்கையின் நீதித்துறை டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி முன்னோக்கிச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வழக்கு தொடர்பான கொடுப்பனவுகளை வங்கி அட்டைகள் மூலம் ஏற்றுக் கொள்ளும் வசதியை உயர் நீதிமன்றம் அறிமுகப்படுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள உயர் நீதிமன்ற வளாகத்தில் பிரதம நீதியசரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையில் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி சட்டத்தரணிகள் மற்றும் பொதுமக்கள் வங்கி அட்டை பரிவர்த்தனைகள் மற்றும் இணையவழி மூலம் அபராதம், வழக்கு கட்டணம், முத்திரை வரி மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல்களுக்கான கட்டணங்கள் போன்ற கொடுப்பனவுகளைச் செலுத்த முடியும்.

மேலும் இந்த வசதியை நீதவான் நீதிமன்றங்களிலிருந்து உயர் நீதிமன்றம் வரை விரிவுபடுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குற்றிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் நால்வர் கைது!

கொழும்பு, செப் .11

யாழில் ஹெரோயின் போதைப்பொருளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். 16, 18, 20 மற்றும் 22 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 170 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மகிந்த இருந்த இல்லத்தை அநுரவுக்கு கொடுப்போம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தங்கி இருந்த அதிகாரப்பூர்வ இல்லத்தை எதிர்காலத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விற்கு வழங்குவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொழும்பு விஜேராமவில் அமைந்துள்ள அதிகாரப்பூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறியமை தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு சேவையாற்றிய அரச தலைவர் ஒருவருக்கு அவரது ஓய்வு காலத்தில் வழங்கப்படும் சிறப்பு உரிமைகளை அரசியல் அமைப்பிலிருந்து சட்டமூலங்கள் ஊடாக நீக்கப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த நாட்டின் கலாச்சாரத்தில் அந்த விடயத்தை அகற்றி விட முடியாது என அவர் தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது அரசியல் வாழ்க்கையில் பல்வேறு திருப்புமுனையான தீர்மானங்களை தங்காலை கார்ல்டன் இல்லத்தி லிருந்து மேற்கொண்டார் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

எதிர்வரும் காலத்திலும் அவ்வாறான ஏதேனும் புதிய ஓர் விடயத்தை சில நேரங்களில் எதிர்பார்க்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த தங்காலைக்கு சென்ற விவகாரம் அரசாங்கத்திற்கு சில வேலைகளில் ஓர் வித்தியாசமான ஒன்றாக உணர நேரிடலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது அரசாங்கம் ஒன்று ஆட்சி பீடம் ஏறும் போது மகிந்த வசித்து வந்த வீட்டை அநுரகுமார திசாநாயக்கவிற்கு வழங்குமாறு தாம் யோசனை ஒன்றை அப்போதைய அரசாங்கத்திடம் முன்மொழிய உள்ளதா சஞ்சீவ எதிரிமான தெரிவித்துள்ளார்.

தலைவர்கள் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுக்கொள்வதில்லை எனுவும் வாழ்நாள் முழுவதும் அவர்கள் அரசியலில் ஈடுபட்டு கொண்டிருப்பார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## குருக்கள்மடம் விடயத்தில் அரசாங்கம் முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கும்



நாடாளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27ஃ2 இன் கீழ், நீதி அமைச்சரிடம் விசேட அறிக்கை சமர்ப்பித்து குருக்கள்மடம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் உரையாற்றினார்.

இது தொடர்பில் அவர் உரையாற்றுகையில்,

1990 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி குருக்கள்மடம் பிரதேசத்தில், முஸ்லிம்கள் தமது புனித ஹஜ் கடமையை நிறைவேற்றி விட்டு வீடு திரும்பும் போதே அங்கிருந்த சிறுவர்கள், முதியோர், இளைஞர்கள் என பலர் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என குறிப்பிட்டதுடன், பல கோரிக்கைகளை முன்வைத்தார்.

1. இப் படுகொலைக்கு உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதோடு, ஜனாஷாக்களை தோண்டி எடுக்க தேவையான முழு உதவியும் வழங்கப்பட வேண்டும்.

2. நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. ஜனாஷாக்கள் அடையாளம் காணப்பட்ட பின், அவர்களின் உடல்கள் இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இக்கோரிக்கைகளுக்கு பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார,

பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் முன்வைத்த மூன்று கோரிக்கைகளையும் அரசு ஏற்றுக்கொள்வதோடு, தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள ஆயத்தமாக உள்ளதாக தெரிவித்தார்.

"நான் குருக்கள்மடம் சென்றமைக்கு ஹிஸ்புல்லாஹ் நன்றி தெரிவித்தார், அவருக்கு நானும் நன்றிகளை தெரிவிக்கிறேன். நான் அங்கு விஜயம் செய்து உரிய இடத்தைப் பார்வையிட்டேன். இதற்குத் தேவையான நிதிகளை என்னுடைய அமைச்சின் மூலமாக ஒதுக்கிட நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று, நவீன தொழில்நுட்ப வசதிகள் அல்லது சிறப்பு கமரா போன்றவை இலங்கையில் இல்லாவிட்டாலும், வெளிநாடுகளிலிருந்து அழைப்பித்துத் தேவையான உதவிகளை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நிதி உதவிகள், வசதி ஏற்பாடுகள், சட்ட உதவிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் உள்ளிட்ட அனைத்து வளங்களும் வழங்கப்பட்டு, இதனை முழுமையாக செய்து முடிப்போம்" என்று அமைச்சர் உறுதியளித்தார்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கும், வழங்கிய உறுதிமொழிக்குமாக எனது மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

## 106 நீதித்துறை அதிகாரிகளுக்கு இடமாற்றம்

*கொழும்பு, செப் .11*

*நீதவான்கள், நீதிபதிகள் உள்ளிட்ட 106 நீதித்துறை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.*

*எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*நீதவான்கள், மேலதிக நீதவான்கள், மாவட்ட நீதிபதிகள், மேலதிக மாவட்ட நீதிபதிகள் மற்றும் பதிவாளர்களுக்கு இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.*

*இந்த இடமாற்றங்களின் கீழ், மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரம வீரசிங்க, மஹர நீதவான் நீதிமன்றத்திற்கும், மஹர நீதவான் எச்.ஜி.ஜே. ஆர். பெரேரா, மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.*

*காலி நீதவான் ஐ.என். என். குமார கமகே, கோட்டை நீதவானாகவும், குருநாகல் நீதவான் என்.டி. குணரத்ன, கம்பஹா மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.*

*கொழும்பு மேலதிக நீதவான் பி.எஸ். பத்திரண, பலபிட்டிய நீதவானாகவும், ஆர்.டி. ஜனக, கொழும்பு மேலதிக நீதவானாகவும் மாற்றப்பட்டுள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, நீதித்துறை பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 17 நீதவான்கள், மேலதிக நீதவான்கள் மேலதிக மாவட்ட நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.*

## பேருந்து கட்டணங்களை வங்கி அட்டைகள் மூலம் செலுத்தும் வசதி விரைவில்!

கொழும்பு, செப் .11

பேருந்து கட்டணங்களை வங்கி அட்டைகள் மூலம் செலுத்துவதற்கான வசதி அறிமுகம் செய்யப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

டிஜிட்டல் மயமாக்கல் வலுவூட்டப்பட்ட நாடாக இலங்கையை மாற்றி அமைக்கும் பயணத்தைத் துரிதப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக செப்டம்பர் மாதம் டிஜிட்டல் பொருளாதார மாதமாகப் பெயரிடப்பட்டுள்ளதாகப் பிரதமர் தெரிவித்தார்.

டிஜிட்டல் பொருளாதார மாதத்திற்கு இணையாக, செயற்கை நுண்ணறிவு தொடர்பான உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2030ஆம் ஆண்டளவில் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தை அமெரிக்க டொலர் 15 பில்லியனாக அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12% ஆக டிஜிட்டல் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் சவாலான இலக்கை அடைவதுடன், டிஜிட்டல் துறையில் ஏற்றுமதியை அமெரிக்க டொலர் 5 பில்லியனாகவும், டிஜிட்டல் துறைசார் தொழிலாளர்களின் எண்ணிக்கையை இரண்டு இலட்சமாகவும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தற்போது நாடு முழுவதும் டிஜிட்டல் மயமாக்கலுக்குத் தேவையான உட்கட்டமைப்புத் தேவைகள் குறித்து ஆய்வு மற்றும் பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குளவி கொட்டியதில் வயோதிபப் பெண் சாவு

தெல்லிப்பழை, செப் .11

யாழ். தெல்லிப்பழை பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை - வித்தகபுரத்தை சேர்ந்த 82 வயதுடைய செல்வநாயகம் பாலசரஸ்பதி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

குறித்த வயோதிபப் பெண் நேற்றுமுன்தினம் தனது வீட்டுக்கு பின்னால் தென்னை ஓலையுடன் இருந்த மிகவும் பெரிய ஒரு குளவிக்கூட்டை தட்டிப் பார்த்த வேளையில், அதில் இருந்த குளவிகள் அவர்மீது கொட்டியது.

இதனையடுத்து அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அன்று இரவு 10 மணி அளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை தெல்லிப்பழை பொலிஸார் நெறிப்படுத்தியிருந்தனர்.

# பொறுப்புக்கூறலுக்கு தயார்..! இலங்கை அரசு உறுதி

மனித உரிமைகள் பேரவையின் தொழில்நுட்ப உதவியுடன், உள்நாட்டு பொறிமுறை மூலம் மனித உரிமைகள் மீறல்களுக்கு பொறுப்புக்கூறலைத் தொடர இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளதாக, வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிற்கு உறுதியளித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள். மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் தற்போது கலந்து கொண்ட அமைச்சர் ஹேரத், நேற்று(10) டர்க்கை சந்தித்தார்.

இந்தக் கூட்டத்தின் போது, வோல்கர் டர்க் சமர்ப்பித்த



அறிக்கை குறித்து ஆழமான விவாதம் நடத்தப்பட்டதாக வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் எழுப்பப்பட்ட வியங்கள் குறித்து இலங்கையின் நிலைப்பாடு குறித்து அமைச்சர் ஹேரத் விரிவான விளக்கத்தை அளித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் புதிய அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும்.

அத்துடன், கடந்த கால மனித உரிமை மீறல்களைக் கையாள ஒரு முறையான சுயாதீன விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவுவதற்கான வாய்ப்பை நாடு இழக்காது என்றும் ஆணையாளர் டர்க் நம்பிக்கை வெளியிட்டதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# "வாக்கு திருட்டு, பாஜக பதவி விலகு" முழக்கத்தை நாடு முழுவதும் மக்களிடம் முன்னெடுத்து செல்வோம்



வாக்கு திருட்டு, பாஜக பதவி விலகு" முழக்கத்தை நாடு முழுவதும் மக்களிடம் தீவிரமாக முன்னெடுத்து செல்வோம் என்று மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார். 2024 நாடாளுமன்ற தேர்தலில் வாக்கு திருட்டு நடைபெற்றதாக ராகுல் காந்தி சமீபத்தில் புள்ளி விவரங்களை வெளியிட்டார். ஆனால் அவரது குற்றசாட்டு அடிப்படை ஆதாரமற்றது என கூறி தேர்தல் ஆணையம் நிராகரித்தது. இதனிடையே பீகாரில் வாக்காளர்பட்டியல் முறைகேட்டை கண்டித்தும், நேர்மையான தேர்தலை வலியுறுத்தியும் வாக்காளர் உரிமை யாத்திரை என்ற பெயரில் வாக்கு திருட்டு குற்றசாட்டை முன்வைத்து. சசாரா முதல் பாட்னா வரை ராகுல் காந்தி யாத்திரை மேற்கொண்டார். அப்போது அவருக்கு பல்வேறு கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வாக்கு திருட்டு தொடர்பாக பொதுமக்கள் இடையே பேசிய அவர் வாக்காளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இதனிடையே உத்தர பிரதேசத்தில் உள்ள தனது சொந்த தொகுதியான ரேபரேலி மக்களவை தொகுதிக்கு 2 நாள் பயணமாக ராகுல் காந்தி நேற்று சென்றார். அங்கு காங்கிரஸ் பூத் கமிட்டி நிர்வாகிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அவர் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். ஹர்சன்ப்பூரில் காங்கிரஸ் தொண்டர்களிடையே பேசிய அவர் மஹாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் வாக்கு திருட்டு அரங்கேறிய விதம் குறித்து எடுத்துரைத்ததாக கூறப்படுகிறது. அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக ராகுல் காந்தி பேசியதாக தகவல் வெளியாகி உள்ளது.

மகாராஷ்டிராவில் மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்ற தொகுதிகளில் அடுத்த 4 மாதங்களில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் தோல்வியை சந்தித்திருப்பது வாக்கு திருட்டை உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார். மகாராஷ்டிராவில் சுமார் 1 கோடி புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டதாக மோசடிகள் மூலம் வாக்குகள் அப்படியே பாஜகவுக்கு சென்றதாகவும் ராகுல்காந்தி குற்றம்சாட்டினார். இதேபோல் கர்நாடகாவிலும் தேர்தல் முறைகேடுகள் நடைபெற்றதாகவும் தற்போது பீகாரிலும் அரங்கேற்றப்பட்டது என்றும் ராகுல்காந்தி குற்றம்சாட்டினார்.

உத்தரபிரதேசம், ஹரியானா, மத்திய பிரதேசம், குஜராத் என தேர்தல் மோசடிகள் பெரிய அளவில் நடைபெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதை அடுத்து வாக்கு திருட்டு பாஜக விலகு என்ற முழக்கம் நாடு முழுவதும் நிரூபிக்கப்பட்டு வருகிறது என்றும் அதனை காங்கிரஸ் இன்னும் வியத்தகு வழிகளில் மக்களிடம் கொண்டு செல்லும் என்றும் ராகுல்காந்தி திட்டவட்டமாக கூறினார். (ஐ)

## உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான அங்கீகாரம் தரும் மாநில அளவிலான குழு மறுசீரமைப்பு




உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான அங்கீகாரம் தரும் மாநில அளவிலான குழுவை மறுசீரமைப்பு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழக சுகாதாரத் துறை செயலர் செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கை:

உறுப்பு மாற்றுக்கு அனுமதி அளிக்கும் மாநில அங்கீகார குழுவை மறுசீரமைக்க வேண்டும் என தமிழக மருத்துவக் கல்வி இயக்குநர் அளித்த கருத்துருவை, அரசு தீவிரமாகப் பரிசீலித்தது. அதன்படி, உறுப்பு மாற்றத்துக்கு அனுமதி அளிக்கும் மாநில அங்கீகாரக் குழுவை மறு சீரமைத்தும், அதற்கான விண்ணப்பக் கட்டணத்தை உயர்த்தியும் அரசு உத்தரவிட்டுள்ளது. உறுப்பு மாற்றத்துக்கு அனுமதி அளிக்க தமிழக மருத்துவக் கல்வி இயக்குநர் தலைமையில் 7 பேர் கொண்ட மாநில அங்கீகாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்திற்குள் பதிவு செய்யப்பட்ட ஆஸ்பத்திரிகளில் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் வெளிநாட்டவரின் விண்ணப்பத்தை மாநில அங்கீகாரக் குழு பரிசீலித்து, அந்த விண்ணப்பத்திற்கு அனுமதி அளிக்கவோ அல்லது நிராகரிக்கவோ செய்யும்.

அதுபோல இந்தியாவிற்குள் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் உறுப்பு மாற்றுக்காக விண்ணப்பிக்கும் மனுக்களையும் இந்த குழு பரிசீலித்து முடிவெடுக்கும். வடக்கு, மத்திய, மேற்கு, தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட அளவிலான அங்கீகாரக் குழுவை மாநில அங்கீகாரக் குழு கண்காணிக்கும். தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆஸ்பத்திரிகளில் மட்டும் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக விண்ணப்பிக்க முடியும். உறுப்பு மாற்று சிகிச்சைக்காக விண்ணப்பிக்கும்போது, என்ன நோக்கத்திற்காக இந்த சிகிச்சை செய்யப்படுகிறது என்பதை உறுப்பு தானம் அளிப்பவரின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களிடம் தொலைபேசியிலும், நேரிலும் அங்கீகாரக் குழு விசாரிக்க வேண்டும். பணத்துக்காகவோ அல்லது வற்புறுத்தலின் பேரிலோ உறுப்பு தானம் செய்ய முன்வரவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

உறுப்பு மாற்று சிகிச்சைக்கான அனைத்து விண்ணப்பங்களும் அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள சட்ட விதிமுறைகள், வழிகாட்டுதல்களின்படி இருக்கின்றனவா என்பதை சரிபார்க்க வேண்டும். மாவட்ட அங்கீகாரக் குழுக்களின் செயல்பாடுகளை மாநில அங்கீகாரக் குழு முழுமையாக கண்காணிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணம் தலா ரூ.2 ஆயிரமாக அதிகரிக்கப்படுகிறது.

இதில் ரூ.1,000 அரசு கணக்கில் செலுத்தப்படும். மீதமுள்ள ரூ.1,000 மாநில, மாவட்ட அங்கீகாரக் குழுக்களின் நிர்வாகச் செலவுக்காகவும், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பயன்படுத்தப்படும். இவ்வாறு அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஈரோடு மாவட்டம், நாமக்கல் மாவட்டத்தில் குறிப்பாக பள்ளிபாளையத்தில் முறைகேடாக கிட்னி விற்பனை செய்யப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், மேற்கண்ட வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது. (ஐ)

## தூய்மை பணியாளர்களுக்கு விலையில்லா உணவு வழங்குவதற்காக 1.87 கோடி ரூபாய் ஒதுக்கீடு



சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு விலையில்லா உணவு வழங்குவதற்காக 1.87 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு 1.81 கோடி ஒதுக்கீடு செய்து தினசரி 10,000 தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்க திட்டமிட்டுள்ளது. சமையல் நிறுவனங்களை தேர்வு செய்வதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது.



## உறவாடி கெடுப்பது பாஜகவின் மாடல்: செல்வப்பெருந்தகை காட்டம்

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை மதுரை விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது: தியாகி இமானுவேல் சேகரனுக்கு புகழஞ்சலி செலுத்துவதில் காங்கிரஸ் பேரியக்கம் பெருமை அடைகிறது. சி.பி. ராதாகிருஷ்ணன் துணை ஜனாதிபதியாக பதவியேற்பதில் நாட்டுக்கு என்ன பெருமை இருக்கிறது. சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தலில் வாக்கு திருட்டு நடந்ததை போல், துணை ஜனாதிபதி தேர்தலிலும் வாக்கு திருட்டு நடந்திருக்கிறதா என தெரியவில்லை.

இதை பிரதமர்தான் சொல்ல வேண்டும். அதிமுகவை உடைக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என நயினார் நாகேந்திரன் கூறியது குறித்த கேள்விக்கு, 'அவர் உலக அதிசயமான வார்த்தையை பேசி இருக்கிறார். மகாராஷ்டிராவில் சிவசேனாவை இரண்டாக உடைத்து ஷிண்டே சிவசேனாவை உருவாக்கியது பாஜக. அதன்பின் ஷிண்டே சிவசேனாவை ஓரங்கட்டி பாஜகவை சேர்ந்தவர் முதல்வராக்கப்பட்டுள்ளார்.

உறவாடி கெடுப்பது பாஜகவின் மாடல். ஆமை புகுவதைப் போல பாஜக புகும் மாநிலம் சிதைந்து போகும். மக்கள் அதிகாரம், திட்டத்தில் கை வைத்து, மக்களுக்கு சேர வேண்டிய அனைத்தையும் அம்பானி, அதானியிடம் பாஜவினர் கொடுத்து விடுவார்கள். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## குடியரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகள் தொடர்பான விவகாரத்தில் தீர்ப்பை ஒத்திவைத்தது உச்ச நீதிமன்றம்

*மசோதாக்கள் மீது முடிவெடுக்க காலநிர்ணயம் செய்த தீர்ப்பு மீது குடியரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகள் தொடர்பான விவகாரத்தில் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்திவைத்தது உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு. 10 நாட்களாக நடந்த விசாரணையில், ஒன்றிய அரசு, தமிழ்நாடு, கேரளா என பல மாநிலங்களின் தரப்பில் இருந்தும் ஆளுநரின் அதிகாரங்கள் குறித்து மிகவும் விரிவான வாதங்கள் நடந்துள்ளன. (ஐ)*




# எங்கள் உலகை ஒளிர வைக்கும் புத்தகங்கள்!

-பிருந்தா கதிர்

பொதுவாக பார்வை உள்ள சிலர் இரத்தத்தைப் பார்த்தாலே மயங்கிவிடுவார்கள். ஆனால், பார்வை அற்ற ஒருவரால் ஒரு பெரிய விபத்து நடந்த இடத்தைக்கூடச் சாதாரணமாகக் கடந்து செல்ல முடியும். ஏனென்றால், அந்த விபத்தின் பாதிப்புகளை அவர்களால் பார்க்க முடியாது. ஆனால், ஒரு எழுத்தாளர் நினைத்தால், ஒரு விபத்து நடந்த இடம் எப்படி இருக்கும், அந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவரின் நிலை என்ன என்பதைத் துல்லியமாக எங்களையும் உணர வைக்க முடியும்.

அந்த வகையில், பார்வையற்றவர்களின் வாழ்க்கையில் புத்தகங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. பாடநூல்கள் முதல் பாலியல் கல்வி வரை உலகைப் புரிந்துகொள்ள உதவும் கருவிகளாக எங்களுக்குப் புத்தகங்கள்தான் உள்ளன.

உதாரணத்திற்கு, கல்கி பொன்னியின் செல்வனில் ஆடிபெருக்கு நிகழ்வை மிக அழகாக வர்ணித்திருப்பார். மக்கள் கூடும் திருவிழாக்களும் கொண்டாட்டங்களும் எப்படி இருக்கும் என்பதை நான் அறிந்துகொண்டது அந்த வர்ணனையின் வழியாகத்தான். இன்னும் சொல்லப்போனால், திருவிழா என்றாலே அப்படித்தான் இருக்கும் என்று என் மூளையில் பதிவாகிவிட்டது.

அதேபோல, எழுத்தாளர் இமையம் எழுதிய ஒரு நாவலில், முதல் சில பக்கங்களுக்குச் சுடுகாட்டில் நடக்கும் ஈமச்சடங்குகளைப் பற்றி நுட்பமாக விவரித்திருப்பார். சுடுகாட்டுச் சடங்குகளை எல்லாம் அந்த நாவலின் வழியாகவே நான் அறிந்துகொண்டேன்.

இது அல்லாது, எங்களால் புரிந்துகொள்ளவே இயலாத சில முகபாவனைகள் - புருவத்தை ஏற்றி முறைப்பது, முகத்தைச் சுளிப்பது, கண்களாலேயே பேசிக்கொள்வது, ஏன்? காதலர்களுக்குள் பரிமாறிக்கொள்ளப்படும் சாதாரண இதழ் முத்தம் பற்றிக் கூட எனக்குச் சொல்லிக்கொடுத்தது புத்தகங்கள்தான்.

உண்மையைச்சொல்ல வேண்டுமென்றால், எங்களின் உலகமே புத்தகங்களால் கட்டமைக்கப்பட்டதுதான்.

ஒரு பார்வை உள்ள நபரின் வாழ்வில் புத்தகங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைவிடப் பல லட்சம் மடங்கு அதிகத் தாக்கத்தையும், மாற்றத்தையும் எங்கள் வாழ்வில் புத்தகங்கள் ஏற்படுத்துகின்றன.

அப்படியான புத்தகங்களைத்தான் நாங்கள் வாசிக்க முடியாத வகையில் இந்தச் சமூகம் எங்களிடமிருந்து விலக்கி வைத்திருக்கிறது.

தொழில்நுட்பம் வளராத காலத்தில் பிரெய்லி புத்தகங்களையே நாங்கள் நம்பியிருக்க வேண்டியிருந்தது. தற்போது, செல்பேசி மூலமாகவே படிக்கும் அளவுக்குத் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது.

ஸ்கிரீன் ரீடரின் உதவியுடன் கிண்டில், பிரதிலிபி போன்ற செயலிகளிலும், பிற இணையதளங்களிலும் புத்தகங்களை எளிதாக எங்களால் வாசிக்க முடிகிறது. ஆனாலும், பெரும்பாலான புத்தகங்கள் மின்னூல்களாக வெளிவராததால், எங்களால் அவற்றைப் படிக்க முடிவதில்லை. பொது நூலகங்களில் பிரெய்லி புத்தகங்கள் ஓரளவு இருந்தாலும், அவற்றின்



எண்ணிக்கை போதுமானதாக இல்லை. தமிழ்நாட்டின் மொத்தப் பார்வையற்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, நூலகங்களில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.

எடுத்துக்காட்டாக, சென்னையில் உள்ள புகழ்பெற்ற அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்கூட, சில ஆயிரக்கணக்கான பிரெய்லி, மின்புத்தகங்கள் மற்றும் ஆடியோ புத்தகங்கள் மட்டுமே உள்ளன. புதிதாக வெளிவரும் புத்தகங்கள் உடனடியாக மின்னூல் அல்லது ஆடியோ வடிவங்களுக்கு மாற்றப்படுவதில்லை.



இதன் காரணமாக, நாங்கள் சமீபத்தில் வெளியான புத்தகங்களைப் படிப்பதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. என் நீண்ட நாள் ஆசையே எனக்குப் பிடித்த எழுத்தாளரின் ஒரு புத்தகத்தையாவது வெளிவந்த அன்றே வாங்கி வாசித்துவிடவேண்டும் என்பதுதான்.

பாடப் புத்தகங்கள் உள்பட எந்த புத்தகமும், எங்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. இந்த நிலை, ‘பொது இடங்கள் மற்றும் சேவைகள் அனைத்தும் மாற்றுத்திறனாளிகள் அணுகும் வண்ணம் இருக்கவேண்டும்’ என்று சொல்லும் சட்டத்திற்கே முரணாக உள்ளது.

அரசுத் தேர்வுக்கோ அல்லது போட்டித் தேர்வுக்கோ நாங்கள் படிக்க வேண்டியிருந்தால், அதற்கான புத்தகங்களும் எளிதாகக் கிடைப்பதில்லை. அவற்றைக் கடைகளில் வாங்கி, ஸ்கேன் செய்துதான் படிக்க வேண்டியுள்ளது.

இதுபோன்ற சிரமங்கள், எங்களது கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளைப் பெருமளவில் பாதிக்கின்றன.

அதனால், அத்தகைய புத்தகங்களை ஸ்கேன் செய்து ழுஊசு தொழில்நுட்பத்தின் உதவியுடன் படிக்க வேண்டியுள்ளது. ழுஊசு என்றால், ஒரு அச்சுப் புத்தகத்தையோ, செய்தித்தாளையோ பார்வையற்றவர் படிக்க வேண்டுமென்றால், அதை ழுஊசு செயலி அல்லது கருவி மூலம் ஸ்கேன் செய்வார். அந்தச் செயலி, படத்திலுள்ள எழுத்துக்களை டிஜிட்டல் உரையாக மாற்றும். பின்னர், **TTS (Text-to-Speech/screen reader)** அதனை படித்துக் காட்டும்.

ஸ்கேன் செய்வதற்கென்றே நிறைய செயலிகள் இருக்கும்போது, அவற்றை பயன்படுத்துவது எளிதுதானே! என்று நீங்கள் நினைக்கலாம். விலை உயர்ந்த ஸ்கேனர்கள் மட்டுமே புத்தகங்களைத் தெளிவாகப் படம் எடுக்கும்.

ஒரு நல்ல ஸ்கேனர் வாங்க வேண்டுமென்றால், தோராயமாக ஒன்றரை லட்சம் ரூபாய் வரை செலவாகும். இந்தச் செலவு, வசதி உள்ளவர்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். மேலும், ஒரு புத்தகத்தை முழுமையாக ஸ்கேன் செய்து ழுஊசு வடிவில் மாற்றுவதற்கு, அதன் பக்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து சில மணிநேரங்கள் முதல் ஒரு முழு நாள் வரை ஆகும்.

மேலும், தமிழ் போன்ற மொழிகளில் உள்ள எழுத்துருக்களை **(stylised fonts)** துல்லியமாக மாற்றுவது கடினம். இதனால் 50மூ முதல் 70மூ மட்டுமே சரியாக மாற்றப்படுகிறது. மீதமுள்ளவற்றை மனிதர்கள் சரிசெய்ய வேண்டியுள்ளது.

அனைவராலும் ஸ்கேனர் வாங்க இயலாதல்லவா? அதனால், ‘பார்வையற்றவன்’ என்ற புனைபெயரில் எழுதும் எழுத்தாளர் திரு. பொன். சக்திவேல், அவர்கள், புத்தகம் படிக்க விரும்பும் பார்வையற்றவர்கள், அச்சுப் புத்தகத்தை அவருக்கு அனுப்பினால், இலவசமாகவே அவற்றை ழுஊசு தொழில்நுட்பம் மூலம் மின்னூல்களாக மாற்றி வழங்கி வருகிறார்.

அதுமட்டுமின்றி, ‘விரல் மொழியர்’ நூல் திரட்டு என்ற பெயரில் ஒரு வாட்ஸ்அப் குழுமத்தையும் தொடங்கி, அதன் மூலம் அனைவரும் பணம் செலுத்தி, மொத்தமாகப் புத்தகங்களை வாங்கி, ஸ்கேன் செய்து பகிர்ந்துகொள்கின்றனர்.

‘புக்ஷேர்’ **(Bookshare)** என்பது பார்வையற்றவர்கள் மற்றும் அச்சிட்ட புத்தகங்களைப் படிக்க முடியாதவர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய சர்வதேச மின்நூல் நூலகம் ஆகும். இதில், 10 லட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் வெவ்வேறு மொழிகளில் உள்ளன. இதன்

(7ஆம் பக்கம் பார்க்க...)

# ஆரக்கிளின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி லாரி எல்லிசனை பின்னுக்கு தள்ளி உலக பணக்காரர் வரிசையில் எலான் மஸ்க் மீண்டும் முதலிடம்



உலக பணக்காரர் வரிசையில் எலான் மஸ்க் மீண்டும் முதலிடம் பிடித்தார். கோடையின் தொடக்கத்தில் ஐரோப்பிய ஒன்றிய விற்பனையில் டெஸ்லா நிறுவனம் 40% சரிவைச் சந்தித்தது, இது தொடர்ச்சியாக ஏழு மாதங்கள் சரிவை ஏற்படுத்தியது. இதற்குக் காரணம் மஸ்க் தீவிர வலதுசாரி அரசியல்வாதிகளுக்கு அவர் சமூக ஊடகங்களில் அளித்த ஆதரவுதான். டொனால்ட் டிரம்புடனான அவரது கூட்டணிக்கு வாடிக்கை யாளர்கள் எதிர்மறையாக பதிலளித்ததால் அமெரிக்க சந்தைப் பங்கும் குறைந் துள்ளது.

இந்த நிலையில், சிறிது காலம் எலான் மஸ்க் உலக பணக்காரர் வரிசையில் பின்னுக்கு தள்ளப்பட்டிருந்தார். ஆரக்கிளின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி ஆரக்கிள் லாரி எல்லிசன் சிறிது காலம் எலான் மஸ்க்கை பின்னுக்கு தள்ளி முதலிடம் பிடித்திருந்தார். இருவருக்கும் இடையிலான தற்போதைய செல்வ இடைவெளி ஒப்பிட்டால் ஒரு பில்லியன் பவுண்டுகளாக உள்ளது. அவர்களின் மிகப்பெரிய நிகர மதிப்பைக் கருத்தில் கொண்டு மஸ்க் ரூ.384.2 பில்லியனும், அதே நேரத்தில் எலிசன் ரூ.383.2 பில்லியனை வைத்திருக்கிறார்.

லாரி எலிசன் உலகின் மிகப்பெரிய பணக்காரராக எலோன் மஸ்க்கை முந்தியபோது, வர்த்தகத்தின் ஆரம்ப நிமிடங்களில், ஆரக்கிள் கார்ப்பரேஷனின் பங்கு விலை வியத்தகு முறையில் அதிகரித்தது, அதன் இணை நிறுவனர் எலிசனை உலகின் பணக்காரர்கள் தரவரிசையில் நீண்டகாலத் தலைவரான எலோன் மஸ்க்கை விட சிறிது நேரத்தில் உயர்த்தியது. இருப்பினும், பங்குச் சந்தையின் நிலையற்ற தன்மை, நாள் முடிவில் மஸ்க்கை உலகின் மிகப்பெரிய பணக்காரர் என்ற நிலைக்கு மீட்டெடுத்தது. ஏனெனில் ஆரக்கிளின் பங்குகள் அவற்றின் முந்தைய உச்சத்தை விடக் குறைவாகவே நிலைபெற்றன. (ஐ)

## அமெரிக்காவில் பல்கலை. நிகழ்ச்சியில் பயங்கரம்: அதிபர் டிரம்ப்பின் தீவிர ஆதரவாளர் சார்லி கிர்க் சுட்டுக்கொலை!



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் ஆதரவாளரான சார்லி கிர்க், பல்கலைக்கழக நிகழ்ச்சியின் போது சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் தீவிர ஆதரவாளராக அறியப்பட்ட சார்லி கிர்க் (வயது 31). சார்லி கிர்க்கிற்கு ஒரு மனைவியும், இரண்டு குழந்தைகளும் உள்ளனர். இவர் இளம் வாக்காளர்களை குடியரசுக் கட்சி ஆதரவாளர்களாக மாற்றுவதில் பெரும் பங்கு வகித்தார். இவர் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து அங்குள்ள மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

அதன்படி உட்டா மாகாணத்தில் உள்ள கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சார்லி கிர்க் கலந்து கொண்டு பேசினார். அப்போது கூட்டத்தில் இருந்து ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் கழுத்தில் குண்டு பாய்ந்து சார்லி கிர்க் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த படுகொலை சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவரை சுட்டுக் கொன்றவர் யார்? எதற்காக சுட்டார் என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. மேலும், ஸ்வாட் பிரிவு காவல் துறையினர் சுட்டுக் கொன்றவர் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தச் சம்பவத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் தன்னுடைய ட்ரூத் சோஷியல் பக்கத்தில் உறுதிபடுத்தியுள்ளார். சார்லி கிர்க்கின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள ஜனாதிபதி டிரம்ப், அவரது படுகொலை சம்பவம் தேசிய துக்கமாக அனுசரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டிரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அமெரிக்க இளைஞர்களின் இதயத்தை சார்லி கிர்க் போல் வேறு யாரும் புரிந்து கொண்டதில்லை. அவர் மீது அனைவரும் அன்பு வைத்திருந்தனர். இன்று அவர் நம்முடன் இல்லை. அவரது குடும்பத்தினருக்கு நானும் எனது மனைவி மெலனியாவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அமெரிக்காவின் மாபெரும் தியாகி சார்லி கிர்க்கை கவுரவிக்கும் விதமாக, அவரது படுகொலையை தேசிய துக்கமாக அனுசரித்து வரும் ஞாயிறு மாலை 6 மணி வரை நாடு முழுவதும் அமெரிக்க கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விட உத்தரவிட்டுள்ளேன் என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

## ஐரோப்பிய யூனியன் முழுவதும் பதற்றம் போலந்துக்குள் நுழைந்து ரஷ்ய டிரோன்கள் தாக்குதல்



உக்ரைன்-ரஷ்யா இடையே நடந்து வரும் போரில் ஐரோப்பிய யூனியன் நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவான நிலை எடுத்து ரஷ்யா மீது பொருளாதார தடை விதித்துள்ளன. இந்த நிலையில் நேற்று போலந்து நாட்டின் வான்வெளிக்குள் ரஷ்ய டிரோன்கள் சரமாரியாக அத்துமீறி நுழைந்தன. சுமார் 10க்கும் மேற்பட்ட டிரோன்கள் போலந்து எல்லைக்குள் நுழைந்தன. அத்தனை டிரோன்களையும் போலந்து நாட்டின் வான்பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியது. போலந்து பிரதமர் டொனால்டு டஸ்க் கூறுகையில்,“போலந்து வான்வெளிக்குள் ஏராளமான ரஷ்ய டிரோன்கள் அத்துமீறி நுழைந்தன.

நேரடி அச்சுறுத்தல் ஏற்படுத்திய டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன” என்றார். போலந்து எல்லை, குடியிருப்பு பகுதிகள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவை சேதமடைந்தன. க்மெல்னிட்ஸ்கியில், ஒரு தையல் தொழிற்சாலை மற்றும் பெட்ரோல் நிலையம் அழிக்கப்பட்டு, மூன்று பேர் காயமடைந்தனர். வின்னிட்சியா, ஜைட்டோமிர் மற்றும் செர்காசி பகுதிகளிலும் சேதம் அடைந்தன. ரஷ்யா டிரோன்கள் தாக்குதலை போலந்து பாதுகாப்பு அமைச்சர் விளாடிஸ்லாவ் கோசினியாக்-காமிஸ் உறுதிப்படுத்தினார்.

நேரடி அச்சுறுத்தல்களை ஏற்படுத்திய பல டிரோன்கள் நேட்டோ படைகளின் உதவியுடன் இடைமறித்து அழிக்கப்பட்டதாக அவர் கூறினார். லுப்ளின் பகுதியில் உள்ள வைரிகி கிராமங்களில் சேதம் ஏற்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். அங்கு ஒரு வீடு தாக்கப்பட்டது, இருப்பினும் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை. மேலும் டிரோன்கள் ஒரு வீட்டையும் ஒரு காரையும் சேதப்படுத்தியதாக போலந்தின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இதுவரை, ஏழு டிரோன்கள் மற்றும் அடையாளம் காணப்படாத ஏவுகணை துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பல ரஷ்ய டிரோன்கள் அதன் வான்வெளியை மீறி போலந்து பகுதிக்குள் நுழைந்ததால் இது ஆக்கிரமிப்புச் செயல் என்று போலந்து நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து வார்சா நகரின் வான்வெளி உடனடியாக மூடப்பட்டது.

நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட நேட்டோ நட்பு நாடுகளுடன் விமான போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. நெதர்லாந்து நாடு உஷார் படுத்தப்பட்டு எப் 35 விமானங்களை தயார் நிலையில் நிறுத்தி வைத்துள்ளது. அதே நேரத்தில் ஜெர்மனி நாடு பேட்ரியாட் ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்துள்ளது. இத்தாலியிலும் போர் விமானங்கள் தயார் படுத்தப்பட்டன. இதனால் ஐரோப்பிய யூனியன் நாடுகள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இதுவரை இல்லாத அளவுக்கு போலந்து இப்போது வெளிப்படையான மோதலுக்கு மிக அருகில் உள்ளது என்று பிரதமர் டஸ்க் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் கூறுகையில்,’நாம் போரின் விளிம்பில் இருக்கிறோம் என்று கூறுவதற்கு எனக்கு எந்த காரணமும் இல்லை, ஆனால் ஒரு எல்லை மீறப்பட்டுள்ளது. இந்த நிலைமை இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிக நெருக்கமான போர் போன்ற சூழலை நமக்குக் கொண்டுவருகிறது’ என்றார். இதனால் ரஷ்யாவின் அடுத்த குறி போலந்தா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஐ)

## பஸ் உள்ளிட்ட வாகனங்களுக்கு தீ வைப்பு பிரான்சில் அரசுக்கு எதிராக போராட்டம் வன்முறையில் ஈடுபட்ட 200 பேர் கைது



பிரான்சில் அரசுக்கு எதிரான போராட்டத்தின் போது கலவரம் வெடித்தது. இதில், பஸ் உள்ளிட்ட வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரான்ஸ் நாட்டின் பிரதமராக இருந்த பிரான்கோயிஸ் பேரோ கொண்டு வந்த செலவு குறைப்பு திட்டம் கூட்டணி கட்சிகள் இடையே வரவேற்பை பெறவில்லை. இதையடுத்து நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் பேரோவுக்கு போதிய ஆதரவு இல்லாததால் பதவியில் இருந்து விலகினார்.

இதையடுத்து புதிய பிரதமராக நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் செபாஸ்டின் கெல்கோர்னுவை பிரதமராக நியமித்து அதிபர் மேக்ரோன் உத்தரவிட்டார். மேக்ரோனின் பதவி காலத்தில் 6 பிரதமர்கள் இருந்தனர். தற்போது 7 வதாக செபாஸ்டின் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அங்கு அரசுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளன. தலைநகர் பாரிஸ் உள்பட பல இடங்களில் போலீசாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. பஸ் உள்ளிட்ட வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. வன்முறையில் ஈடுபட்ட 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழு ஒன்று குடும்பஸ்தர் மீது வாள்வெட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய நபரே வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் படுகாயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப பட்டுள்ளது.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கன்ரர் ரக வாகனம் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞருடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞரை வீதியில் சென்றவர்கள் மீட்டு, அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## குருக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1990ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணித்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு இன்று களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது உரிய நபர்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டு அடையாளப்படுத்தப பட்டுள்ள இடத்தை, இன்று நீதிபதி ஜே.பீ.ஏ.ரஞ்சித்குமார் முன்னிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர், சட்டத்தரணிகள், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர், பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக அதிகாரிகள், சட்ட வைத்திய நிபுணர்கள், தடயவியல் பொலிஸார், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பலரும் நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்போது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் உரிய இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

சம்பவ இடத்தில் புதைக்கப்பட்ட மனித எச்சங்களைத் தோண்டி எடுக்குமாறு ஏற்கனவே களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் இன்று நீதிபதி தலைமையிலான உயர் அதிகாரிகள் உரிய இடத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

குருக்கள்மடம் கடற்கரைப் பகுதியை அண்மித்ததாக உள்ள இடம் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்குப் பாதுகாப்பு வலயம் அமைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உத்தியோகபூர்வ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று வெளியேறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் 150 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதை அடுத்து,முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலத்தில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு நேற்று சான்றுரைப்படுத்தினார். இதற்கமைய குறித்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமாக நடைமுறைக்குவந்துள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்து சிறப்பு வரப்பிரசாதங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## ஓடோடிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எமது நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர மற்றும் தனிப்பட்ட உறவு ரீதியான நீடித்த நட்புறவை நான் அன்புடன் நினைவுகூருகின்றேன்." - என்று குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இன்று முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள்பலரும்முன்னாள்ஜனாதிபதி மஹிந்தவைச் சந்திப்பதற்கு விஜேராம இல்லத்துக்குச் சென்றிருந்தனர். ஆதரவாளர்களின் கோஷங்களுக்கு மத்தியில் அவர் அங்கிருந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விஜேராம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைய குறித்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமாக நடைமுறைக்குவந்துள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து இன்று வெளியேறுவார் என்ற தகவல் வெளியான நிலையிலேயே அரசியல்வாதிகளும், இராஜதந்திரிகளும் ஆதரவாளர்களும் அவரைச் சந்தித்து நலம் விசாரித்து வந்தனர்.

இந்நிலையில், மஹிந்த ராஜபக்ஷ கொழும்பிலுள்ள விஜேராம வீதியில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து இன்று பிற்பகல் வெளியேறி அம்பாந்தோட்டை - தங்காலைக்குக் குடியேறச் சென்றுள்ளார்.

# மேலும் 15 பாதாள உலக குழு உறுப்பினர்கள் கைது

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட இலங்கையின் மேலும் 15 பாதாள உலக குழு உறுப்பினர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரஷ்யா, ஓமான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவில் அவர்கள் கைதாகியுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இன்று (11) பாராளுமன்றில் தெரிவித்தார்.

அதன்படி, இந்த பாதாள உலக குழு உறுப்பினர்களை அந்த நாடுகளின் சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கமாண்டோ சலிந்தவுக்கு தோட்டாக்களை வழங்கிய இராணுவ அதிகாரி கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான கமாண்டோ சலிந்துவுக்கு வு56 வெடிமருந்துகளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் இராணுவ லுதினன் கேர்னல் ஒருவர் இன்று (11) மேல்மாகாண வடக்கு குற்ற விசாரணை பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்ட நேரத்தில் முல்லைத்தீவின் மல்லாவியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் கட்டளை அதிகாரியாக பணியாற்றி வந்துள்ளார். கணேமுல்ல கமாண்டோ படைப்பிரிவில் பணியாற்றிய காலத்தில் வு56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 260 தோட்டாக்களை குற்றவாளியான கமாண்டோ சலிந்தவுக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் 650,000 ரூபாய்க்கு அவர் விற்பனை செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் மீது மேலும் இரண்டு குற்றச்சாட்டுகளும் உள்ளதாக கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# குற்றக் கும்பலின் உறுப்பினரான கெஹெல்பத்தர பத்மேவுடன் நெருங்கிய தொடர்பு பேணிய உப பொலிஸ் பரிசோதகர் கைது!

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் உறுப்பினரான கெஹெல்பத்தர பத்மேவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் கம்பஹா பிரிவின் குற்ற விசாரணை பிரிவில் பணியாற்றியவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட கெஹெல்பத்தர பத்மே உட்பட குற்றக் கும்பலின் ஐந்து உறுப்பினர்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றது.

குறித்த விசாரணைகளின் போது தெரியவந்த தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# முன்னாள் ஜனாதிபதிகளின் 2024 இன் வரப்பிரசாத செலவு!

ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை ரத்து செய்யும் சட்டத்தின் விதிகளின்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் செலவினங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதிகளின் 2024 இன் வரப்பிரசாத செலவு தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அதன்படி கடந்த வருடத்தில் மாத்திரம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 9 கோடியே 85 இலட்சத்து 48 ஆயிரத்து 839 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக நேற்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சீருடைகளில் பொருத்தக்கூடிய கமெராக்களை வழங்க தீர்மானம்!

போக்குவரத்து குற்றங்களைக் குறைக்கும் நோக்கில் போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சீருடைகளில் பொருத்தக்கூடிய கமெராக்களை வழங்குவதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் சில வாரங்களுள் குறித்த கமெராக்களை அனைத்து போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வூட்லர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எங்கள் உலகை..........

மூலம், பிரெய்லி, ஆடியோ, மற்றும் பெரிய எழுத்துரு போன்ற பல்வேறு வடிவங்களில் புத்தகங்களை அணுகமுடியும்.

இந்தத்தளத்தில் உறுப்பினராகச்சேர்ந்தால், தேவையான புத்தகங்களைச் செல்பேசி, டேப்லெட் அல்லது கணினி போன்ற சாதனங்களில் பதிவிறக்கம் செய்து படிக்கலாம். இதன் மூலம், பார்வையற்ற மாணவர்கள் தங்களின் பாடநூல்கள் மற்றும் பிற புத்தகங்களை எளிதாகப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு உருவாகியுள்ளது.

பார்வையற்றவர்கள் இவ்வாறு செலவு செய்து படிப்பதற்குத் தயாராக இருந்தாலும், எழுத்தாளர்களும் பதிப்பகங்களும் எங்களை நுகர்வோராகக்கூடக் கருதுவதில்லை.

ஆடியோ புத்தகங்கள் வெளிவருகின்றனவே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், அவை வெறும் ஒரு சதவிகிதம் மட்டுமே. ஆடியோ புத்தகங்களுக்கென்றே சில செயலிகள் இருக்கின்றன. குக்கூ எஃப் எம், ஸ்டோரிடெல், ஆடிபிள், ஸ்பாட்டிஃபை, புஸ்தகா, பாக்கெட் எஃப் எம் போன்ற செயலிகள் இருந்தாலும் இவற்றில் தமிழ் நூல்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அது மட்டுமல்லாமல் திரை வாசிப்பானின் (screen reader) உதவியுடன் எங்களுக்கு அணுகுவதற்கும் எளிதாக இல்லை. விகடன் குழுமம் 'விகடன் பிளே' என்ற ஒன்றை தொடங்கி, முக்கியமான புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை ஆடியோ வடிவில் வெளியிடுகின்றனர்.

பதிப்பாளர்களின் அனுமதி இல்லாமல் ஸ்கேன் செய்வது தவறு இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். இந்தியக் காப்புரிமைச் சட்டம் 1957, பிரிவு 52(1) (2டி) மாற்றுத் திறனாளிகளுக்காகப் படைப்புகளை மின்னூல் போன்ற அணுகக்கூடிய வடிவங்களுக்கு மாற்றுவதை, சட்டப்பூர்வமான, நியாயமானப் பயன்பாடாக அங்கீகரிக்கிறது. எனவே தனிப்பட்டப் பயன்பாட்டிற்காகப் புத்தகங்களை மின்னூலாக மாற்றுவது சட்டவிரோதச் செயலல்ல.

2016-ம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சட்டத்தின்படி, அனைத்துக் கண்டுபிடிப்புகளும் பார்வையற்றவர்கள் உள்பட, அனைத்து மாற்றுத்திறனாளிகளும் அணுகும் வகையில் இருக்கவேண்டும் என்று சட்டம் உள்ளது. ஆனால், இதை இங்குள்ள பல எழுத்தாளர்களும், பதிப்பகங்களும் கவனத்தில் கொள்வதில்லை.

பொதுவாக, பார்வையற்றவர்கள் என்றால் உலகம் தெரியாதவர்கள் என்ற கருத்து இங்கு நிலவுகிறது. நாங்கள் சொற்கள் மற்றும் புத்தகங்கள் மூலமாகத்தான் இந்த உலகத்தைப் புரிந்துகொள்கிறோம்.

ஆனால், சில எழுத்தாளர்களும் பதிப்பகங்களும் எங்களுக்கு அதையும் மறுக்கிறார்கள். பெரும்பான்மையான தமிழ்ப் பதிப்பாளர்கள் தங்கள் படைப்புகளை அச்சுப் புத்தகங்களாக மட்டுமே வெளியிடுகிறார்கள். இது பார்வையற்ற சமூகத்தை வெளிப்படையாகப் புறக்கணிப்பதாகத்தானே அர்த்தம்? மின்நூல்களாக வெளியிட்டால் புத்தகங்கள் திருடப்படுகின்றன என்று எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் புலம்புகிறார்கள். அச்சுப் புத்தகங்களை வெளியிட்டால் மட்டும் திருடமாட்டார்களா என்ன? நானும் பல அச்சுப் புத்தகங்களை ஒனுகு வடிவத்தில் திருட்டுத்தனமாகப் பகிரப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் எந்த வடிவில் வெளியிட்டாலும், படைப்புத் திரு டர்களை ஒருபோதும் ஒழிக்க முடியாது.

எனவே, எழுத்தாளர்களே, பதிப்பாளர்களே ஒவ்வொரு படைப்பை வெளியிடும்போதும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒதுக்கிவைத்துவிடுகிறோம் என்பதை மனதில்கொள்ளுங்கள். படைப்பு திருடர்களை பற்றி சிந்திப்பதை விடுத்து, நீங்கள் வாழும் இந்த உலகத்தில்தான் என்னை போன்ற பார்வையற்றவர்களும் வாழ்கிறார்கள் என்று கொஞ்சம் சிந்திக்கலாமே!







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.09.2025 வெளியிடப்பெற்றது.